செய்தி வெளியீடு எண்: 656 நாள்:28.09.2019

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (28.9.2019) சேலம் மாவட்டம், எடப்பாடி சட்டமன்றத் தொகுதி, கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம், கச்சுப்பள்ளியில், முடிவுற்ற திட்டப் பணிகளை துவக்கி வைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி ஆற்றிய உரை**

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

இன்றையதினம் எடப்பாடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெறும் விழாவில் கலந்து கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இன்றைக்கு அடிக்கல் நாட்டப்பட்ட கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணியானது புரட்சித்தலைவி அம்மா இருக்கின்ற காலத்திலே எடப்பாடி, கொங்கணாபுரம், மகுடஞ்சாவடி ஆகிய மூன்று ஒன்றியங்களை உள்ளடக்கி ஒரு கூட்டுக் குடிநீர் திட்டத்தை புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்றபொழுதே அறிவித்து, அவர்களுடைய திருக்கரங்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, அவர் முதலமைச்சராக இருந்தபோது துவக்கி வைத்தாகும். அதில் சில பகுதிகள் விடுபட்டிருப்பதாக பல்வேறு தரப்பினரும் வேண்டுகோள் வைத்த காரணத்தினால் இன்றையதினம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில், எடப்பாடி, கொங்கணாபுரம் ஒன்றியத்திற்குட்பட்ட குடிநீர் கிடைக்காத 137 குடியிருப்புகளுக்கு ரூபாய் 23 கோடியே 52 லட்சம் மதிப்பீட்டில் மறுசீரமைப்பு மற்றும் புனரமைப்பு திட்டத்தின் கீழ் எடப்பாடி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் புதிய குடிநீர் திட்டப் பணிக்கு இன்றையதினம் அடிக்கல் நாட்டப்பட்டிருக்கின்றது. இந்தத் திட்டம் நிறைவேறுகின்றபொழுது, 137 குடியிருப்புப் பகுதிகளுக்கும் பாதுகாக்கப்பட்ட காவிரி தண்ணீர் கிடைக்கும். கடுமையான வறட்சி வருகின்றபொழுது கூட, கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் குடிநீர் பிரச்சினை இருக்கக்கூடாது என்பதற்காகத்தான், விடுபட்ட பகுதிகள்,

சரியாக தண்ணீர் சென்றடையாத பகுதியையெல்லாம் கண்டறிந்து, அந்தப் பகுதிகளுக்கும் குடிநீர் வழங்க வேண்டும் என்பதற்காக இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

இன்றையதினம் நடைபெறும் விழாவில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் மூலம், தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் சார்பாக ரூபாய் 2 கோடியே 90 லட்சம் மதிப்பீட்டில் எடப்பாடி நகராட்சி பேருந்து நிலையம் அருகில் புதிதாக கட்டப்பட்டுள்ள டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய திருநாமத்தின் பெயரில் இன்றைக்கு வணிக வளாகம் ஒன்று திறக்கப்பட்டிருக்கின்றது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் சார்பில் தாய்–2 திட்டத்தின் கீழ் ரூபாய் 40 லட்சம் மதிப்பீட்டில் கொங்கணாபுரம் ஊராட்சி கச்சுப்பள்ளியில் உள்ள அம்மா பூங்கா மற்றும் அம்மா உடற்பயிற்சிக் கூடமும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உதவித் திட்டத்தின் கீழ் ரூபாய் 51 இலட்சம் மதிப்பீட்டில் குறுவம்பட்டி, சமுத்திரம் மற்றும் கச்சுப்பள்ளி ஆகிய 3 ஊராட்சி மன்ற அலுவலகங்களுக்கு புதிய கட்டடங்களும், கச்சுப்பள்ளி, சமுத்திரம், வளையப்பட்டி, கொல்லப்பட்டி, வெள்ளாளபுரம் ஆகிய ஊராட்சிகளில் சுமார் ரூபாய் 51 இலட்த்து 2 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 6 அங்கன்வாடி மையங்களும் இன்றையதினம் திறக்கப்பட்டிருக்கின்றன. ஆக மொத்தம் இந்த விழாவில் ரூபாய் 4 கோடியே 32 இலட்சத்து 20 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட 11 கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன.

இறு திறந்து வைக்கப்பட்டிருக்கின்ற அம்மா பூங்கா அழகாக, சிறப்பாக அமைக்கப்பட்டிருக்கின்றது. இந்த சுற்றுவட்டாரத்தில் இருக்கின்ற மக்கள் மாலை நேரத்தில் பொழுதுபோக்கு அம்சமாக அமைந்துள்ளது. வெளிநாட்டில் இருப்பதைப் போல, கச்சுப்பள்ளி பகுதியும் திகழ்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. இந்தப் பூங்காவில்

இயற்கையாக இருக்கின்ற மிருகங்களைப் பார்ப்பது போல காட்சிப்படுத்தியிருக்கின்றார்கள். அதேபோல, இளைஞர்கள் உடற்பயிற்சி செய்வதற்காக அம்மா உடற்பயிற்சிக் கூடம் அமைக்கப்பட்டிருக்கின்றது. இங்கே உள்ள இளைஞர்கள் கட்டான உடம்பை உருவாக்கிக் கொள்வதற்கு இந்த ஜிம்–ஐ பயன்படுத்திக் கொள்ளலாம். அதுமட்டுமல்லாமல், ஷட்டில் கார்க் கோர்ட் சிறப்பாக அமைக்கப்பட்டிருக்கின்றது, அற்புதமான விளையாட்டு மைதானத்தை உங்களுக்காக அரசு வழங்கியிருக்கின்றது. ஆகவே, இவற்றையெல்லாம் நல்ல முறையில் பயன்படுத்தி, இங்கிருக்கின்ற இளைஞர்களும், பொதுமக்களும் மகிழ்ச்சியோடு பொழுதை கழிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கச்சுப்பள்ளி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனையை இன்றைக்கு அம்மாவினுடைய அரசு துவக்கியிருக்கிறது. எடப்பாடிக்கும், சங்ககிரிக்குமிடையே அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை கொடுத்திருக்கின்றோம். கல்லூரிக்கான புதிய கட்டடம் எட்டிக்குட்டைமேட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. ஆகவே, இந்தப் பகுதி மக்கள் குறைந்த கட்டணத்தில் கல்லூரியில் சேர்ந்து படிக்கக்கூடிய வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கின்றோம்.

அதேபோல, புதிய தொழில் துவங்குவதற்காக இன்றைக்கு எட்டிக்குட்டைமேட்டில் சிட்கோ தொழிற்பேட்டை ஒன்று அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, விரைவாக தொழில் உற்பத்தி துவங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி தொழிற்பேட்டை துவங்குகின்றபொழுது, கச்சுப்பள்ளியை சுற்றியுள்ள இளைஞர்களுக்கும், பொதுமக்களுக்கும் அதிக வேலைவாய்ப்புகள் கிடைக்கும்.

அதுமட்டுமல்லாமல், இப்பகுதி மக்களுக்கு சீரான மின்சாரம் கிடைக்க வேண்டும் என்பதற்காக எட்டிகுட்டைமேட்டில் பவர் ஹவுஸ் அமைத்திருக்கின்றோம். திருச்செங்கோட்டிலிருந்து சங்ககிரி, கொங்கணாபுரம் வழியாக ஓமலூர் வரை செல்வதற்கு நான்கு வழிச்சாலைப் பணிகள் விரைவில் தொடங்க இருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்களுக்குத் தேவையான குடிநீர் தங்குதடையின்றி வழங்க கச்சுப்பள்ளியில் இரண்டு குடிநீர் மேல்நிலைத் தொட்டிகள் கட்டி கொடுக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதியைச் சுற்றிலும் நல்ல சாலை வசதிகளை கொண்டதாக உருவாக்கித் தந்திருக்கிறோம். இப்பகுதி மக்களின் கோரிக்கையை ஏற்று, சுமார் ரூபாய் 93 லட்சம் செலவில் திருமண மண்டபம் கட்டும் பணி நடைபெற்று கொண்டு இருக்கிறது. மிகக் குறுகிய காலத்தில், இந்த ஊராட்சியில் பல்வேறு பணிகளை நிறைவேற்றித் தந்திருக்கின்றோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவுடைய அரசு மக்களுடைய அரசு. மக்களுக்கு தேவையான திட்டங்களை தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கும் அரசு. இந்தப் பகுதி ஒரு வறட்சியான பகுதி. விவசாயத்திற்கு தேவையான நீர் கிடைப்பதில்லை. பருவமழை பொய்க்கின்ற காரணத்தினால், தண்ணீர் பிரச்சனை ஏற்படுகிறது. இதற்கு தீர்வு காண வேண்டும் என்று சொன்னால், இந்தப் பகுதியிலே இருக்கின்ற ஏரிகள், குளங்கள் நிரப்பப்பட வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளீர்கள். அந்தக் கோரிக்கையை நிறைவேற்றுகின்ற விதமாக, மேட்டூர் அணையின் உபரி நீரை, சுமார் ரூபாய் 565 கோடி மதிப்பீட்டில் நீரேற்றுத் திட்டத்தின் மூலமாக, கொங்கணாபுரம் மற்றும் கச்சுப்பள்ளி

பகுதிகளில் இருக்கின்ற ஏரிகளில் நிரப்பப்படும். அப்பணி இன்னும் 5 மாத காலத்திலே பணி துவங்க இருக்கின்றோம். ஒரே ஆண்டில் பணி முடிந்து விடும். இன்னும் இரண்டு ஆண்டுகள் கழித்து பார்த்தால் நம்முடைய ஏரிகள் அனைத்தும் நீர் நிரம்பி காட்சியளிக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராமத்திலே இருக்கின்ற ஏரிகள், குளங்கள் அனைத்தும் தூர் வாரப்பட வேண்டும் என்பதற்காக குடிமராமத்து திட்டத்தை கொண்டு வந்து, இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள குளங்கள் எல்லாம் தூர் வாரப்படுகின்றன. அதேபோல, பொதுப்பணித்துறைக்கு சொந்தமான ஏரிகளும் தூர் வாரப்படுகின்றன. இந்த தூர் வாரும் திட்டத்தை முழுக்க முழுக்க விவசாயிகளுக்கே அளித்து செயல்படுத்துகின்றோம். விவசாயிகள் தூர்வாரும் போது கிடைக்கின்ற வண்டல் மண்ணை இயற்கை உரமாக பயன்படுத்துகிறார்கள். மேலும் ஏரிகளும் ஆழமாகிவிடுகின்றது. ஏரியை தூர் வாருவதற்கு தேவையான நிதியை அரசு ஒதுக்கீடு செய்து, கிராமப்புறத்திலே இருக்கின்ற விவசாயிகள் பயனடைய வேண்டும், கிராமப்புற மக்களுக்கு தேவையான குடிநீர் வசதி செய்து தர வேண்டும், பெய்கின்ற மழைநீர் ஒரு சொட்டு கூட வீணாகக்கூடாது என்பதற்காக இந்த குடிமராமத்து திட்டத்தை விவசாயிகளிடத்திலே ஒப்படைத்து அரசு செயல்படுத்தி வருகிறது.

அதுமட்டுமல்லாமல், தமிழ்நாடு முழுவதும், ஓடைகள் மற்றும் ஆறுகளின் குறுக்கே தடுப்பணைகள் கட்டி, தண்ணீரை தேக்கி வைத்து, மழைகாலத்தில் பெய்கின்ற மழைநீர் வீணாக வெளியேறாமல், அப்பகுதியிலே தேக்கி, நிலத்தடி நீர்மட்டம் உயர்த்தி, விவசாயத்திற்கும், குடிநீருக்கும் தேவையான நீர் கிடைத்திடும் வகையில், ஒரு மிகப்பெரிய

திட்டத்தை நிறைவேற்றவுள்ளோம். இத்திட்டம், மூன்றாண்டு கால திட்டமாக நிறைவேற்ற ரூபாய் 1000 கோடி ஒதுக்கீடு செய்துள்ளோம். இதுவரை ரூபாய் 600 கோடிக்கான பணிகள் துவக்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயிகள், உப தொழிலாக கால்நடைகளையும் வளர்க்கிறார்கள். அதிக அளவிலே பால் தரக்கூடிய பசு மாடுகளை வளர்க்க வேண்டும் என்பதற்காக தலைவாசல் கூட்டு ரோடு அருகிலே சுமார் 1000 ஏக்கரில் ஆசியாவிலே மிகப் பெரிய கால்நடை பூங்கா உருவாக இருக்கிறது. அதற்காகத்தான் நான் வெளிநாடு சென்றேன். அமெரிக்க நாட்டின், கலிபோர்னியா மாநிலத்தில், Buffalo என்ற இடத்திலே இருக்கின்ற கால்நடை பண்ணைக்கும் சென்றேன். அங்கு ஒரே இடத்தில் 3000 மாடுகளை வளர்க்கிறார்கள். அம்மாடுகள் காலையில் 30 லிட்டர் முதல் 40 லிட்டர் வரை பால் தருகிறது. மாலையில் சுமார் 35 லிட்டர் வரை பால் தருகின்றது. சராசரியாக ஒவ்வொரு மாடும் சுமார் 60 முதல் 75 லிட்டர் வரை பால் தருகிறது. அதேபோல தமிழ்நாட்டிலும் கலப்பின பசுக்களை உருவாக்கி, விவசாயிகளுக்கு கொடுக்கின்ற போது, அவர்களின் பொருளாதார நிலையும் மேம்படும் என்பதற்காகத் தான், தலைவாசலில் கால்நடை ஆராய்ச்சி நிலையத்தை அமைக்க இருக்கின்றோம். அதேபோல அதிகமான எடை கொண்ட தரமான ஆடுகளை ஆராய்ச்சி நிலையிலிருந்து விவசாயிகளுக்கு தர இருக்கின்றோம். மீன் வளர்த்து தர உள்ளோம். இப்படி திட்டத்தை விவசாயிகளின் நலனிற்காக உருவாக்கித் தரவிருக்கின்றோம்.

விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற காய்கறிகள், அவர்களுக்கு கட்டுப்படியான விலை கிடைக்க வேண்டும் என்பதற்காக, சென்னைக்கு அருகிலே சுமார் ரூபாய் 2000 கோடி மதிப்பீட்டில் உணவுப் பூங்கா ஒன்றை துவக்கவிருக்கின்றோம். ஓமலூர், மேச்சேரி, தராமங்கலத்திற்கு இடையே பிரம்மாண்டமான காய்கறி மார்க்கெட் உருவாக்கவிருக்கின்றோம். அந்த மார்க்கெட்டில் ஆன்லைனில் காய்கறிகளை விற்கலாம். விலை வீழ்ச்சியிலிருந்து விவசாயிகளைக் காப்பாற்றவும், அதிக விலை கிடைக்கவும் இந்த திட்டத்தை உருவாக்கி இருக்கின்றோம். தமிழ்நாடு முழுவதும் இந்த திட்டத்தை விரிவாக்கவும் இருக்கின்றோம். விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்க வேண்டும் என்பது தான் இதனுடைய நோக்கமாகும்.

விவசாயிகள் நிறைந்த பகுதியாக இருக்கின்ற காரணத்தினாலே, விவசாயிகளுக்கு நிறைந்த சேவையை அளிக்கின்ற அரசாக அம்மாவின் அரசு விளங்கி வருகிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, இது உங்களுடைய அரசு, மக்களுடைய அரசு, மக்களின் தேவையை அறிந்து நிறைவேற்றுகின்ற ஒரே அரசு எங்களுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய தொகுதிக்கு முதலமைச்சர் கிடைத்திருக்கிறார். அது மிக மிக முக்கியம். தமிழ்நாட்டில் 234 தொகுதிகள் இருந்தாலும், தமிழ்நாட்டில் எந்த பகுதிக்கும் சென்றாலும், நாங்கள் எடப்பாடியில் இருந்து வருகிறோம், முதலமைச்சர் தொகுதியில் இருந்து வருகிறோம் என்று சொன்னால், தனி மரியாதை இருக்கிறது. நான் உங்களை முதலமைச்சராக இருந்து பார்க்கவில்லை. நீங்களெல்லாம் முதலமைச்சராக என்னை

உருவாக்கித் தந்திருக்கின்றீர்கள். அந்த பெருமைக்கு உரிய வகையில் நீங்கள் இங்கே அமர்ந்திருக்கின்றீர்கள். மக்களுக்குத் தேவையான திட்டங்களை அளிப்பது தான் என்னுடைய லட்சியம்.

முதன்முதலாக நான் சேவல் சின்னத்தில் போட்டியிட்டு, சட்டமன்ற உறுப்பினராக உயர்ந்து, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் நெடுஞ்சாலைத் துறை அமைச்சராக நியமனம் செய்யப்பட்டு பணியாற்றினேன். சிறப்பாக பணியாற்றிய காரணத்தினால் **2016**ல் நெடுஞ்சாலை துறை மற்றும் பொதுப்பணித் துறை ஆகிய இரண்டு பெரிய துறைகளை கொடுத்து சிறப்பாக நீங்கள் செயல்பட வேண்டும் என்று அம்மா அவர்கள் தெரிவித்தார்கள். அதன் அடிப்படையிலே சிறப்பாக செயல்பட்டு கொண்டு இருந்த நேரத்திலே அம்மா அவர்கள் மறைந்த பிறகு, எல்லாம் வல்ல இறைவனுடைய அருளால், அம்மாவுடைய அருளாசியால், உங்களைப் போல் இருக்கின்ற நல்ல உள்ளங்களின் அருளாசியால் இன்றைக்கு தமிழகத்தின் முதலமைச்சராக பொறுப்பேற்று இன்று கச்சுப்பள்ளியிலே பேசுகின்ற வாய்ப்பை உங்களால்தான் பெற்றுள்ளேன் என்பதை எந்த காலத்திலும் மறக்க மாட்டேன். ஆகவே, நான் உங்கள் வீட்டில் ஒருவனாக இருந்து, இந்தப் பகுதி மக்களின் நலனுக்காக என்றென்றும் பாடுபடுவேன் என்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடை பெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**